# அனுராதபுரகாலஓவியங்கள்

## சிகிரியா





01) இவ் ஓவியங்களைவரைந்தமன்னன் யார்?காசியப்பன்

02) சிகிரியாஎந்தமாவட்டத்தில் காணப்படுகின்றது?மாத்தளைமாவட்டம்

03) இது எத்தனையாம் நூற்றாண்டைச் சேர்ந்தது?கி.பி 5 ஆம் நூற்றாண்டு

04) இங்குகாணப்படும் கட்டிடக்கலைஅம்சங்களைக் குறிப்பிடுக?
வில்வளைவு,படிவரிசை,அகழி,குளம்,என்பவற்றைக் கொண்டகற்பூங்கா

05) சிகிரியாஓவியத்தின் கருப்பொருள் யாது?
சிகிரியாக்குன்றின் மேற்புறகுடைவுகளில் உள்ளபெண் உருவங்களில்
சிகிரியாஓவியங்களாகப் பிரபல்யம் அடைந்தன.

06) சிகிரியாசுவரில் எத்தனைஓவியங்கள் வரையப்பட்டதாகக் கூறப்படுகிறது?
500 ஓவியங்கள்

07) தற்போதுகிட்டத்தட்டஎத்தனைஓவியங்கள் எஞ்சியுள்ளது?22 ஓவியங்கள்

08) சிகிரியாஓவியங்கள் எந்தநுட்பமுறையில் வரையப்பட்டது?
ஈர்ச்சுதை (பிரஸ்கோபுவனோ) முறையில்

09) சிகிரியாஓவியங்கள் வேறுஎந்தமுறையில் வரையப்பட்டதாகஆய்வாளர்கள்
கருதுகின்றனர்?பிரஸ்கோசிக்கோ (உலர்சுதை)

10) ஓவியங்கள் வரையஎப்பொருட்கள் பயன்படுத்திசாந்துதாரிக்கப்பட்டது?
வைக்கோல்,உமி,களிமண்,தாவரநார்வகை,பசை (பிசினி)
சுண்ணாம்புஆகியபயன்படுத்திசான்றுதயாரிக்கப்பட்டன.

11) சிகிரியாஓவியங்கள் இந்தியாவில் உள்ளஎந்தஓவியங்களுடன்
நெருங்கியதொடர்புடையது?அஜந்தாஒளியங்களுடன்

12) ஓவியங்கள் பற்றிஆனந்தகுமாரசுவாமிஅவர்களின் கருத்துயாது?
இம்மங்கையர்கள் தேவகன்னியர்கள் (அப்சரா) எனக்கூறுகின்றனர்.

13) பெண்களின் உருவங்கள் எவ்வாறுசித்தரிக்கப்பட்டுள்ளன?
தனியாகவும் சோடியாகவும்,பூத்தட்டுக்களையும் மலர்க்
கொத்துக்களைஏந்தியவண்ணமும், இடுப்புப்பகுதிமுகில்களால் மறைக்கப்பட்டும்
சித்தரிக்கப்பட்டுள்ளது.

14) சிகிரியாபெண்களின் கைகளிலும் தலைகளிலும் காணப்படும் மலர்கள் எவை?
தாமரை,அலரி,நீலஅலரி

15) இவ்வொளியங்களுக்குபயன்படுத்தியநிறங்கள் எவை?
மஞ்சள்,கபிலம்,சிவப்பு,பச்சை,கறுப்பு

16) ஓவியங்கள் பற்றிபரணவிதானாவின் கருத்துயாது?
குபேரனின் மகள்மாறானவிஜயுலதா,மேகலதா (மின்னல் பெண்கள்,மேகப் பெண்கள்)

17) சிகிரியாஓவியங்கள் பற்றிபெல் என்பவரின் கருத்துயாது?
காசியப்பமன்னனின் அரசிகளும் பணியாளர்களும் எனக் கூறுகின்றார்.

**சமாதிப்புத்தர் சிலை**

01. அருகில் உள்ளநிழற்படத்தில் காணப்படும் சிலையின் பெயரைக் குறிப்பிடுக?
சமாதிப் புத்தர் சிலை



02. தற்போதுகாணப்படும் இடம் எது?அநுராதபுரம்

03. இதன் கலைமரபுயாது?குப்தகலைமரபு

04. இச்சிலையின் நிலையாது?அமர்ந்தநிலை

05. இது எம்மன்னன் காலத்தில் இச்சிலைவடிவமைக்கப்பட்டது?
கி.பி 4ஆம் 5ஆம் நூற்றாண்டில் மகாசேனன் மன்னன் காலத்தில்
நத்தை சுருள் போன்றது

06. புத்தருடையகேசம் எதைப்போன்றது?நத்தைச் சுருள்

07. இதன் சிறப்பம்சம் என்ன?
கருங்கல்லைஊடகமாகபயன்படுத்தினாலும் இச்சிலைபுத்தபெருமானின்
பெருங்கருணைசாந்தம்,அன்புபோன்றசிறப்பியல்புகளைசிற்பக் கலைஞர்கள்
சிறப்பாகவெளிப்படுத்திஉள்ளார்.காவியுடைஅலைமடிப்புக் கொண்டது
ஆடை உடலுடன் ஒட்டியவாறுகாணப்படுகின்றது

**தொலுவிலபுத்தர்சிலை**



01. இவ்வோவியத்தை இனங்காண்க?தொலுவிலபுத்தர் சிலை

02. எத்தனையாம் நூற்றாண்டில் இச்சிலைவடிவமைக்கப்பட்டது?
கி.பி.7ஆம் நூற்றாண்டில்

03. இப்புத்தர் சிலைகுறிக்கும் முத்திரையாது?
தியானமுத்திரை

04. இப்புத்தர் சிலைசெய்யப்பட்டஊடகம் யாது?கருங்கல்

05. செல்வாக்குச் செலுத்திய இந்தியக் கலைமரபுயாது?குப்தகலைமரபு

06. இது எப்புடைப்புமுறையில் நிர்மானிக்கப்பட்டது? முழு புடைப்பு

07. இச்சிலையின் சிறப்பம்சம் என்ன?
கருங்கல்லைஊடகமாகபயன்படுத்தினாலும் இச்சிலைபுத்தபெருமானின்
அழகுமலர்ச்சியானதன்மையைக் காட்டும் சிறப்பியல்புகளைசிற்பக் கலைஞர்கள்
சிறப்பாகவெளிப்படுத்திஉள்ளார்.
காவியுடைஒருபக்கம் போர்த்தப்பட்டுஉடலுடன் ஒட்டியவாறுகாணப்படுகின்றது

**அவுக்கணபுத்தர்சிலை**



01) இப்புத்தர் சிலையின் பெயர் என்ன?
அவுக்கணபுத்தர் சிலை

02) இப்புத்தர் சிலைஎங்குகாணப்படுகின்றது?
அவுக்கணகிராமம்

03) எத்தனையாம் நூற்றாண்டில் இச்சிலைசெதுக்கப்பட்டது?
கி.பி 5ஆம் 8ஆம் நூற்றாண்டில்

04) புத்தர் சிலைசெதுக்கப்பட்டஊடகம் எது?
கருங்கல்

05) இச்சிலைக்குஅனுசரணைவழங்கியமன்னனின் பெயர் என்ன?தாதுசேனன்

06) இச்சிலையின் உயரம் என்ன? 38 அடி 10 அங்குலம்

07) இங்குகாணப்படும் முத்திரைஎன்ன?வலதுகையினால் அபயமுத்திரை

08) இச்சிலைஎக்கலைமரபில் ஆக்கப்பட்டுள்ளது?அமராவதி

09) இதன் சிறப்பம்சம் யாது?
கருங்கற் பாறையில் முழுப்புடைப்பாகசெதுக்கப்பட்டுள்ளது
புத்மாசனமொன்றின் மீதுநிற்பவைபோன்றுசெதுக்கப்பட்டுள்ளது
காவியுடையஒருபக்கம் போர்த்தப்பட்டுசீரானஅழகியமடிப்புக்களைக் கொண்டது
ஆடை உடலுடன் ஒட்டியவாறுகாணப்படுகின்றது
தலையில் மேல் தீச்சுடர் அலங்காரம் உள்ளது இது பின்னர் சேர்க்கப்பட்டுள்ளது

**பங்குளியபுத்தர்சிலை**



01) இச்சிலையின் பெயர் என்ன?
பன்குளியப் புத்தர் சிலை

02) இப்புத்தர் சிலைஎங்குகாணப்படுகின்றது?
அநுராதபுரபன்குளியபிரதேசத்தில் அசோகரமாவிகாரையில்

03) எத்தனையாம் நூற்றாண்டில் இச்சிலைவடிவமைக்கப்பட்டது?
கி.பி5ஆம் 6ஆம் நூற்றாண்டில்

04) இப்புத்தபெருமான் அமர்ந்துள்ளநிலையாது?
வீராசனநிலையில்

05) இதன் கலைமரபுயாது?குப்தகலைமரபு

06) இது என்னபுடைப்புமுறைஆகும்?முழுப்புடைப்பு

07) புத்தர் கையில் காட்டப்பட்டுள்ளமுத்திரையாது?
வலதுகையில் விதர்க்கமுத்திரை, இடதுகையில் கடகஹுதமுத்திரை

08) இப்புத்தர் சிலைசெய்யப்பட்டஊடகம் யாது?
கருங்கல்

**இசுறு முனியவிகாரை**



01) இங்குகாட்டப்பட்டுள்ளகட்டடநிர்மாணம் யாது?
இசுறுமுனியாவிகாரை

02) எம்மன்னன் காலத்தில் அமைக்கப்பட்டது?
தேவசம்பிதீசனால்

03) இங்குகாணப்படும் செதுக்கங்களைக் குறிப்பிடுக?
காதலர் சிற்பம்,அரசகுடும்பம்,குதிரைத்தலையும்,மனிதஉருவமும்,நீராடும் யானைகள

04) இவற்றுள் காணப்படும் செதுக்கல்களின் பண்புகளைக் குறிப்பிடுக?
தளத்துக்குபொருத்தமாகச் செதுக்கப்பட்டிருத்தல் உணர்வுகள் முகத்தினாலும் மெய்நிலைகளாலும் காட்டப்பட்டிருத்தல்
இயற்கையானவடிவங்களும் மெய்நிலைகளும் சந்தத்துடன் வெளிப்பட்டிருத்தல்
மென்மையான,ஒப்புரவானமுழுநிறைவைக் கொண்டிருத்தல்

**அரசகுடும்பம்**



01) இனங்காணல் :- அரசகுடும்பம்

02) காலப்பகுதி :- அநுராதபுரம்

03) கலைமரபு :- பல்லவ

04) சிலையில் இருப்பவர்கள் :- துட்டகைமுனுமன்னனும் குமாரன் காவியனும்

05) புடைப்பு :- அரைப் புடைப்புநுட்பமுறை

06) பரணவிதானவின் கருத்து :- துட்டகைமுனுமன்னனின் குடும்பமாகும்

**காதலர்சிலை**



01) இனங்காணல் :- காதலர் சிற்பம்

02) காலப்பகுதி :- அநுராதபுரகாலம்

03) சிலையில் இருப்பவர்கள் :- சாலியகுமாரனும்

அசோகமாலாவும் எனக் குறிப்பிடுகின்றார்

04) கலைமரபு :- குப்த

05) புடைப்பு :-அரைபுடைப்புநுட்பமுறை

**குதிரைத்தலையும் போர்வீரனும்**



01) இனங்காணல் :- மனிதனும் குதிரைத்தலையும்

02) இவர் என்னதோற்றத்தில் அமர்ந்துள்ளார் :- மகராஜ தோரணையில்

03) இச்சிற்பம் பற்றிபரனவிதானவின் கருத்துயாது?

மனிதனும் குதிரைத் தலையும் நீரையும் அக்கினியையும்
குறிக்கின்றதுமழைக்குஅதிபதிவருணபகவான் குதிரைமின்னலைக்குறிப்பாகஅவர் கருத்து

04) இச்சிலைஎக்கலைமரபில் ஆக்கப்பட்டுள்ளது? பல்லவ

05) இது செதுக்கப்பட்டநுட்பமுறையாது?அரைபுடைப்பு (குறைபுடைப்பு)

**நீராடும் யானைகள்**

01) அருகில் காட்டப்பட்டுள்ளசெலுத்துகல் யாது?
நீராடும் யானைகள் சிற்பம்



02) இச்சிலைஎக்கலைமரப்பில் ஆக்கப்பட்டுள்ளது?
பல்லவ

03) இது செலுக்கப்பட்டுள்ளநுட்பமுறையாது?
அரைபுடைப்புப்பு(குறைபுடைப்பு)

04) இந்தியாவின் எச்சிற்பத்துடன் தொடர்புடையதுஆகும்.
மாமல்லபுரத்துகங்காவரோகணசிறபத்திற்கு